இந்தியாவில் அதிபர் தேர்தல்?: டொனால்ட் டிரம்ப் ஏற்படுத்திய குழப்பம்

வாஷிங்டன், அக். 5: அமெரிக்க தேர்தல் நடைமுறை ஊழல் நிறைந்தது என்று விமர்சித்து பதிவிட்ட அந்நாட்டு அதிபர் டொனால்ட் டிரம்ப், இந்திய அதிபர் தேர்தலில் உடனுக்குடன் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுவது சிறப்பானது என்று சமூக ஊடகத்தில் வெளியிட்ட பதிவு குழப்பத்தை ஏற்படுத்தியது.

ஏனெனில், இந்தியாவில் அதிபர் தேர்தல் என்பது இல்லை, மேலும் இப்போது இந்தியாவில் தேர்தல் ஏதும் நடைபெறவில்லை. அதே நேரத்தில் பிரேஸிலில்தான் இப்போது அதிபர் தேர்தல் நடைபெற்றுள்ளது. பிரேஸிலுக்கு பதிலாக இந்தியா என்று அவர் தவறாகப் பதிவிட்டுள்ளதாகத் தெரிகிறது.

முன்னதாக, ட்ரூத் சோஷியல் சமூக ஊடகத்தில் டிரம்ப் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட பதிவில், 'இந்திய அதிபர் தேர்தலில் 12.5 கோடி பேர் வாக்களித்தனர்; வாக்குப் பதிவு முடிந்த சிறிது நேரத்திலேயே முடிவுகள் வெளியாகிவிட்டன. ஆனால், அமெரிக்காவில் தேர்தல் முடிவுகளை அறிவிக்க பல வாரங்கள் ஆகிறது. அமெரிக்காவில் வாக்களிப்பும், தேர்தலும் ஊழல் நிறைந்தது.

முக்கியமாக டெட்ராய்ட், ஃபிலடெல்பியா, கலிஃபோர்னியா மற்றும் அமெரிக்காவின் பல நகரங்கள், மாகாணங்களில் குறைவான வாக்குகள் இருந்தாலும், முடிவுகளை 'முறைகேடு செய்ய' அதாவது, கணக்கிட பல வாரங்கள் ஆகின்றன' என்று கூறியுள்ளார்.

இதில் பிரேஸில் என்று கூறுவதற்குப் பதிலாக இந்தியா என டிரம்ப் தவறாகப் பதிவிட்டுள்ளார். ஏனெனில் ஞாயிற்றுக்கிழமை பிரேஸில் அதிபர் தேர்தலின் முதல் சுற்று நடைபெற்றது. அந்நாட்டின் தேர்தல் ஆணையத்தின் தகவல்படி, அங்கு 12.527 கோடி வாக்குகள் பதிவாகின. வாக்குப் பதிவு மாலை 5 மணிக்கு முடிவடைந்தவுடன் வாக்கு எண்ணிக்கை தொடங்கி முடிவுகள் வெளியிடப்பட்டன.

பிரேஸில் அதிபர் தேர்தலில், தற்போதைய அதிபர் லூயிஸ் இனாசியோ லூலா டாசில்வா, முன்னாள் அதிபர் ஜெய்ர் போல்சனாரோவின் மகன் ஃப்ளாவியோ போல்சனாரோ ஆகியோர் போட்டியிட்டனர். இருவரில் யாரும் முதல் சுற்றில் பெரும்பான்மை பெறாததால், அக்டோபர் 25-ஆம் தேதி இரண்டாம் சுற்றுத் தேர்தல் நடைபெற உள்ளது.

அதே நேரத்தில் இந்தியாவில் அதிபர் தேர்தல் என்பது கிடையாது. இந்திய குடியரசுத் தலைவர் திரெளபதி முர்மு கடந்த 2022 ஜூலையில் இருந்து அப்பதவியை வகித்து வருகிறார்.

மேலும், இந்தியாவில் குடியரசுத் தலைவரை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுப்பதில்லை. நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் எம்.பி.க்கள் மற்றும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச எம்எல்ஏக்களின் வாக்குகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

2024 மக்களவைத் தேர்தலில் இந்தியாவில் சுமார் 98 கோடி வாக்காளர்கள் இருந்தனர். இதற்கு முன்பு இந்திய தேர்தல் நடைமுறையை அதிபர் டிரம்ப் பாராட்டியுள்ளார். முக்கியமாக இந்தியாவில் பின்பற்றப்படும் வாக்காளர் அடையாள அட்டை நடைமுறையை அமெரிக்காவில் பின்பற்ற வேண்டும். அமெரிக்காவில் தேர்தல் சீர்திருத்தங்கள் தேவை என்று கூறியிருந்தார்.

மேலும், இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் அமெரிக்க அதிகாரிகளைச் சந்திக்கும்போது, புகைப்பட அடையாள அட்டை இல்லாமல் அமெரிக்காவில் எவ்வாறு தேர்தல் நடத்த முடியும் என்று கேட்டதாகவும் டிரம்ப் தெரிவித்தார்.

போட்டித் தேர்வு ரத்தைக் கண்டித்து...

1799
दारोगा
MAINS
CANCELLATION
वापस लो
PHYSICAL
DATE
जारी करो
DAROGA MAINS परीक्षा CANCELLATION
वापस लो और PHYSICAL DATE जारी करो
बिहार पुलिस
Investigation mains exam Cancel ... किया

பிகாரில் காவல் உதவி ஆய்வாளர் பணிக்காக நடத்தப்பட்ட முதல்நிலை (மெயின்) தேர்வு ரத்தைக் கண்டித்தும், அடுத்தகட்டமான உடல் தகுதித் தேர்வுக்கான தேதியை அறிவிக்க வலியுறுத்தியும் தலைநகர் பாட்னாவில் திங்கள்கிழமை போராட்டத்தில் ஈடுபட்ட தேர்வர்கள்.

ஜம்மு-காஷ்மீரில் இருந்து 150 வங்கதேசத்தவர் வெளியேற்றம்

ஸ்ரீநகர், அக். 5: ஜம்மு-காஷ்மீரில் சட்டவிரோதமாக ஊடுருவி வசித்து வந்த 150 வங்கதேசத்தவர் அங்கிருந்து திங்கள்கிழமை வெளியேற்றப்பட்டனர். அடுத்தகட்டமாக மேலும் 150 பேர் புதன்கிழமை (அக். 7) வெளியேற்றப்பட இருக்கின்றனர்.

மேற்கு வங்கம் மற்றும் வடகிழக்கு மாநிலங்கள் வாரியாக சட்டவிரோதமாக இந்தியாவுக்கு வங்கதேசத்தவர் ஊடுருவுவது வழக்கமாக உள்ளது.

பொதுவாக வேலைவாய்ப்பு உள்ளிட்ட காரணங்களுக்காக அவர்கள் இந்தியாவுக்குள் வருவதாகக் கூறப்பட்டாலும், அவர்கள் மூலம் தேசப் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படவும் வாய்ப்புள்ளதாக மத்திய அரசு கருதுகிறது. ஏனெனில், பொதுமக்கள் என்ற பெயரில் வங்கதேசம் வழியாக பயங்கரவாதிகள் ஊடுருவும் அபாயமும் உள்ளது.

இந்தியாவுக்குள் ஊடுருவும் வங்கதேசத்தவர் பலர் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் வசித்து வருகின்றனர்.

அவர்களைக் கண்டுபிடித்து சொந்தநாட்டுக்குதிரும்ப அனுப்ப தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அந்த வகையில் ஜம்மு-காஷ்மீரில் வசித்து வந்த 150 வங்கதேசத்தவர் அந்த யூனியன் பிரதேசத்தில் இருந்து திங்கள்கிழமை வெளியேற்றப்பட்டனர்.

இந்திய விமானப் படைக்குச் சொந்தமான விமானம் மூலம் மேற்கு வங்கத்தின் பாக்டோக்ரா நகரத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு, எல்லைப் பாதுகாப்புப் படையிடம் (பிஎஸ்எஃப்) ஒப்படைக்கப்பட்டனர்.

அங்கிருந்து அவர்கள் மீண்டும் வங்கதேசத்துக்கு திருப்பி அனுப்பப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணினி குறியீடுகளோடு வேத கணிதத்தையும் மாணவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்

ராஜ்நாத் சிங்



அயோத்தி, அக். 5: கணினி குறியீடுகளோடு வேத கணிதத்தையும் மாணவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீகுரு பருவ மகாமகோற்சவத்தையொட்டி, உத்தர பிரதேச மாநிலம் அயோத்தியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஸ்ரீநாராயண சம்ஸ்கிருத உயர்கல்வி நிறுவனத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற துறவியர் மாநாட்டில் பங்கேற்று அவர் பேசியதாவது:

சம்ஸ்கிருதம் என்பது வெறுமனே ஒரு மொழி அல்ல; அது இந்தியாவின் ஞான பாரம்பரியக் களஞ்சியமாகும். அந்த மொழியில் வேதங்கள், உபனிஷத்துகள், கணிதம், மருத்துவம், தத்துவம், இலக்கியம் உள்ளிட்டவை உள்ளன.

வேத கணிதமும் நவீன கல்வியும் இணக்கமானவை. நான் கடந்த 1991-இல் உத்தர பிரதேச மாநில கல்வித் துறை அமைச்சராக இருந்தபோது வேத கணிதத்தை மாணவர்களின் பாடத் திட்டத்தில் அறிமுகம் செய்தேன்.

இந்தியாவின் அறிவுசார் பாரம்பரிய மொழி சம்ஸ்கிருதம். தாம் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அந்த மொழியில் உள்ள வேத கணிதத்தை மாணவர்கள் கற்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்தை நான் வலியுறுத்துவேன்.

நான் இயற்பியல், கணிதம், வேதியியல் ஆகிய பாடங்களைப் படித்தேன். வேத கணிதம் இன்னமும் ஈடுஇணையற்றது என்று என்னால் கூறமுடியும். மிகவும் சிரமமான கணித சமன்பாடுகளைக் கூட வேத முறைப்படி தீர்க்க முடியும். லண்டன் பொருளாதாரக் கல்வி நிறுவனத்தில் வேத கணிதம் கற்பிக்கப்படுகிறது.

சம்ஸ்கிருத ஸ்லோகங்களையும் கணினிக் குறியீடுகளையும் புரிந்துகொள்ளக் கூடிய மாணவர்கள் நமக்குத் தேவை. சம்ஸ்கிருதத்தில் உள்ள நியாயா, மீமாம்சை போன்றவற்றை அவர்கள் கற்பதோடு நவீன சமூகத்தின் பிரச்னைகளைப் புரிந்து கொள்ளக்கூடிய திறன் வாய்ந்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

நவீனத்துவம் என்பது ஒருவர் வாழும் காலத்தில் உள்ள பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் தன்மை ஆகும்.

உலக ஞானத்தை சில நொடிகளில் நாம் அறிந்துகொள்ள தொழில்நுட்பம் உதவுகிறது. எனினும் அந்த ஞானத்தை சரியாகப் பயன்படுத்தும் புத்திசாலித்தனம் மக்களுக்கு இருக்கிறதா என்பதே முக்கிய கேள்வி.

துறவிகள் நமக்கு லட்சியக் கண்ணோட்டத்தை அளிக்கின்றனர். நமது அனைத்து கேள்விகளுக்கும் அவர்கள் விடை அளிக்க வேண்டியதில்லை.

சில நேரங்களில் அவர்கள் நமக்கு கேள்விகளை அளிக்கின்றனர். அது நமது வாழ்வில் சரியான பதில்களைக் கண்டறிவதற்கான நமது பயணத்தின் தொடக்கமாக அமைகிறது.

ராம ஜென்மபூமி இயக்கத்துக்கு துறவிகளின் பங்களிப்பு மகத்தானது. அயோத்தியில் கட்டப்பட்டுள்ள பிரம்மாண்டமான கோயிலில் ராமர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள நிலையில் துறவிகளின் தியாகங்களும், துன்பங்களும் தற்போது நினைவுகூரப்பட வேண்டும் என்றார் அவர்.

ஜேஇஇ தேர்வு: 6 ஆண்டுகளில் இல்லாத வகையில் பெண்கள் தேர்ச்சி விகிதம் அதிகரிப்பு

புது தில்லி, அக். 5: 2026-ஆம் ஆண்டு நடைபெற்ற ஜேஇஇ முதன்மை (அட்வான்ஸ்டு) தேர்வில் கடந்த 6 ஆண்டுகளில் இல்லாத வகையில் பெண்கள் தேர்ச்சி விகிதம் அதிகரித்துள்ளது.

ஒட்டுமொத்தமாக 43,112 பெண் தேர்வர்கள் இத்தேர்வுக்கு விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் இரு தாள்களையும் 40,562 பேர் எழுதிய நிலையில் 10,107 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். கடந்தாண்டு தேர்வுக்கு விண்ணப்பித்த 5 பெண்களில் ஒருவர் தேர்ச்சி பெற்றிருந்த நிலையில் நிகழாண்டு 4 பேரில் ஒருவர் என்ற விகத்தில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இதுதொடர்பாக நிகழாண்டு ஜேஇஇ முதன்மைத் தேர்வை நடத்திய ஐஐடி ரூர்க்கியின் கூட்டு அமலாக்கக் குழு வெளியிட்ட செய்திக் குறிப்பில், '2026-இல் பெண்களுக்கு மட்டுமே 3,814 இடங்கள் ஒதுக்கப்பட்டன. பாலின பாகுபடற்ற இட ஒதுக்கீட்டுப் பிரிவின்கீழ் 37 பெண் தேர்வர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டில் பட்டியலின (எஸ்சி) மற்றும் பழங்குடியின (எஸ்டி) பிரிவில் முறையே 12,499 மற்றும் 5,008 தேர்வர்கள் தேர்ச்சி பெற்ற நிலையில், நிகழாண்டு எஸ்சி பிரிவில் 15,856 பேரும் எஸ்டி பிரிவில் 6,379 பேரும் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதன்மூலம் எஸ்சி பிரிவில் தேர்ச்சி விகிதம் 9.8 சதவீதமாகவும் எஸ்டி பிரிவில் 8.1 சதவீதமாக அதிகரித்துள்ளது.

கடந்தாண்டு பொதுப் பிரிவில் 43 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்ற நிலையில், நிகழாண்டு 39.8 சதவீதமாக குறைந்தது. இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் (கிரீமி லேயர் அல்லாத) தேர்ச்சி விகிதமும் 18.2 சதவீதத்தில் இருந்து 17.5 சதவீதமாக குறைந்தது. நிகழாண்டு ஓபிசி பிரிவில் 12,385 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். பொருளாதரத்தில் நலிவடைந்த பிரிவில் தேர்ச்சிபெற்றவர்களின் எண்ணிக்கை 6,291-இல் இருந்து 6,377-ஆக அதிகரித்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

மணிப்பூர் பாலியல் வன்கொடுமை வழக்கு

பாதிக்கப்பட்ட பெண்களின் வாக்குமூலத்தை பதிவு செய்ய உச்சநீதிமன்றம் உத்தரவு

புது தில்லி, அக். 5: மணிப்பூரில் பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட 2 பெண்கள் மற்றும் சாட்சிகளிடம் நேரில் வாக்குமூலம் பெற்றதை உறுதி செய்ய சிபிஐ மற்றும் விசாரணை நீதிமன்றத்துக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட இரண்டு பேரின் பிணை மனுக்களை ரத்து செய்யக் கோரி சிபிஐ தாக்கல் செய்த மனுக்களை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த் மற்றும் நீதிபதிகள் ஜயமால்ய பாக்சி மற்றும் வி.மோகனா ஆகியோர் அடங்கிய அமர்வு திங்கள்கிழமை விசாரித்தது.

அப்போது சிபிஐ தரப்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் டி.பி.சிங், '2 பெண்களும் மிகக் கொடிய முறையில் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டுள்ளனர். அவர்களை நிர்வாணமாக்கியதோடு விடியோ பதிவும் எடுத்துள்ளனர். எனவே, இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு பிணை வழங்கக் கூடாது' என்றார்.

குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் ஒருவர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் ஷாதன் ஃபராசத், 'குறிப்பிட்ட காலஅவகாசத்துக்குள் சிபிஐயால் இந்த வழக்கில் விசாரணையை முடிக்க முடியவில்லை. இந்த வழக்கில் சுமார் 30 சாட்சிகள் உள்ளனர். வழக்கு இரண்டாம் நிலை விசாரணையில் உள்ளது' என்றார்.

அப்போது பாதிக்கப்பட்ட பெண்கள் விசாரணைக்கு வராதது ஏன்? என நீதிபதி ஜயமால்ய பாக்சி கேள்வியெழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த பாதிக்கப்பட்ட மற்றும் புகார்தாரரான பெண் ஒருவரின் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் நிஜாம் பாஷா, 'முன்பு விசாரணைக்கு அழைக்கப்பட்ட தினம் பொது விடுமுறை என்பதால் பாதிக்கப்பட்ட பெண் வாக்குமூலம் அளிக்கவிருந்த மையம் மூடப்பட்டிருந்தது. மற்றொரு பெண் டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ளதால் நேரில் வரவில்லை' என்றார்.

இதைத் தொடர்ந்து, தலைமை நீதிபதி சூர்ய காந்த் பிறப்பித்த உத்தரவில், 'பொது விடுமுறை தினத்தில் விசாரணைக்கு அழைத்தால் பாதிக்கப்பட்டவர் ஆஜராவார் என எதிர்பார்க்க முடியாது. எனவே, அக்டோபர் 7, 9 மற்றும் 28 ஆகிய தேதிகளில் பாதிக்கப்பட்ட பெண்கள் விசாரணை நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்படுத்தப்பட்டு அவர்களின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதை சிபிஐ உறுதி செய்ய வேண்டும்.

அதன்பிறகு குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பிணை மனு குறித்து பரிசீலிக்கலாம். இந்த உத்தரவுக்கு சிபிஐ, விசாரணை நீதிமன்றம் மற்றும் அனைத்துத் தரப்பினரும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்' எனத் தெரிவிக்கப்பட்டது. மணிப்பூரில் கடந்த 2023, மே 2-ஆம் தேதி குகி மற்றும் மைதேயி சமூகத்தினருக்கு இடையே மோதல் வெடித்ததில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். ஆயிரக்கணக்கானோர் தங்களின் வசிப்பிடத்தைவிட்டு வெளியேறினர்.

இந்த வன்முறை குறித்த பல்வேறு வழக்குகளை உச்சநீதிமன்றம் விசாரித்து வருகிறது. முன்னதாக, மணிப்பூர் வன்முறை தொடர்பாக சிபிஐ மற்றும் தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) கையாளும் வழக்குகளை விசாரிக்க இரு சிறப்பு விசாரணை நீதிமன்றங்களை அமைக்க மணிப்பூர் மற்றும் அஸ்ஸாம் மாநில அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு கடன் மீட்பு தீர்ப்பாயம் -II, சென்னை முன்னிலையில்
மேலு தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரி பவன், ஹாடோஸ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை - 600 006.
O.A. எண்.277/2026

இந்தியன் வங்கி, ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் மேலாண்மை கிளை, 55, இரண்டாவது தளம், வெல்லிங்டன் எஸ்டேட், எத்திராஜ் சாலை, எழும்பூர், சென்னை - 600 008, பிரதிநிதியாக உதவி பொது மேலாளர் ...விண்ணப்பதாரர்

(எதிரிடை)

(1) M/s. சாய் பாலிமர்ஸ், பிரதிநிதியாக இதன் பங்குதாரர்கள், ஷில்பா சாய் மற்றும் G. ராமன், எண்.2/16, 3வது தெரு, குமரன் காலனி, வடபழனி, சென்னை - 600 026.
(2) திரு. G. ராமன், த/பெ கோவிந்தன், பழைய எண்.22, புதிய எண்.32, அஜீஸ் நகர் முதல் தெரு, கோடம்பாக்கம், சென்னை - 600 024.
(3) Ms. B. ஷில்பா சாய், த/பெ சாய்குமார், ஃபிளாட் எண்.F-1, எண்.2/16, 3வது தெரு, குமரன் காலனி, வடபழனி, சென்னை - 600 026.
மேலும் இருப்பது : எண்.599A, 24வது தெரு, அஷ்டலட்சுமி நகர், வளசரவாக்கம், சென்னை - 600 087. ...பிரதிவாதிகள்

பிரதிவாதிகளுக்கு பத்திரிக்கை பிரசுரம்

பிரதிவாதிகளிடமிருந்து ரூ.1,45,74,182.42 தொகையை மீட்பதற்காக மேற்கண்ட அசல் விண்ணப்பம் விண்ணப்பதாரர் வங்கியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த OA 277/2026 என எண்ணிடப்பட்டுள்ளது. பிரதிவாதிகளுக்கான அழைப்பாணைகள் திரும்ப வந்துவிட்டது. எனவே இந்த மாண்புமிகு தீர்ப்பாயத்தின் கற்றறிந்த பதிவாளர் விண்ணப்பதாரர் வங்கிக்கு மாற்றுமுறை சேவை எடுத்து 02.11.2026 அன்று ஆஜராக பத்திரிக்கை பிரசுரம் வெளியீடு செய்ய உத்தரவிட்டுள்ளார். எனவே, பிரதிவாதிகள் இந்த மாண்புமிகு தீர்ப்பாயத்தின் முன்னிலையில் நேரிடையாக அல்லது வழக்கறிஞர் மூலமாக 02.11.2026 அன்று ஆஜராகவும். அவ்வாறு தவறினால் எந்த மேல் அறிவிப்பும் இன்றி நீங்கள் இல்லாத நிலையிலும் வழக்கு விசாரிக்கப்பட்டு சட்டப்படி முடிவு செய்யப்படும்.

M/s. P.V. முரளிதர், P.M. சுரேந்தர், அபினயஸ்ரீ T,
மொபைல் எண்.9840165259, விண்ணப்பதாரரின் வழக்கறிஞர்

பாங்க் ஆஃப் பரோடா
बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

செங்குன்றம் கிளை
எண்.33, சோத்துபாக்கம் மெயின் சாலை,
சாய் டவர்ஸ், சோத்துபாக்கம், சென்னை – 600052
தொலைபேசி: 044 - 26323457/ 26323452

அசையா சொத்துகளின் விற்பனைக்கான இ - ஏல அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை பத்திரமயமாக்குதல் மற்றும் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 (SARFAESI Act 2002) விதிகளின் கீழ் விதி 6 (2) & 8 (6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல்.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துகள் நிதி சொத்துக்களை பாதுகாத்தல் மற்றும் சீரமைத்தல் மற்றும் பிணை வட்டி அமலாக்க சட்டம் 2002 விதி 8 (6) ன் கீழ் பாங்க் ஆஃப் பரோடா அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் விவரம், நிலுவைத் தொகை, சொத்து விவரம், ரிசர்வ் விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர் மற்றும் முகவரி: கடன்தாரர்: 1. திரு. M. அருள் (கடன்தாரர்), 2. திரு. A. பிரபாகரன் (இணை கடன்தாரர்), 3. திருமதி. A. அமுல் (ஜாமீன்தாரர்), மனை எண். 8, சக்தி நகர், 7வது தெரு, வெண்பாக்கம் கிராமம், எண்.59, பொன்னேரி குரூப் 2, பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்-601204

நிலுவைத் தொகை : 03.10.2026 தேதிப்படி ரூ.33,47,813.93 மேலும் 03.10.2026 தேதி முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள் — ஆக்கப்பூர்வ சுவாதீனம்

அசையா சொத்து விவரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின்: திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுக்கா, பொன்னேரி குரூப் 2, வெண்பாக்கம் கிராமம், எண்.59ன் பழைய சர்வே எண்.538/2A1, பழைய பட்டா எண்.2711, புதிய பட்டா எண்.4767, புதிய சர்வே எண். 538/15ன் மனை எண்.8 சக்திநகரில் உள்ள 1755 சதுர அடி அல்லது 163 சதுர மீட்டர் அதனுடன் இணைந்த இங்கு கட்டப்பட்டுள்ள குடியிருப்பு கட்டிடங்கள். திரு. அருளுக்கு சொந்தமானது. எல்லைகள் - வடக்கு : 12 அடி சாலை, தெற்கு : சக்திநகர் லே-அவுட், கிழக்கு : 22 அடி சாலை, மேற்கு : மனை எண்.7. இச்சொத்து சென்னை வடக்கு பதிவு மாவட்டம் பொன்னேரி சார்பதிவு மாவட்டத்தின் எல்லைக்குட்பட்டது.

குறைந்த பட்ச நிர்ணய விலை :	டேவணித் தொகை :	ஏலத் தொகையை அதிகரித்தல் :
ரூ. 89,00,000/-	ரூ.8,90,000/-	ரூ.25,000/-

மேலே குறிப்பிடப்பட்டுள்ள (வ. எண். 1 & 2) வங்கியின் நேரடி சுவாதீனத்தில் இல்லை மற்றும் ஏலத்தில் எடுப்பவர் நிலையான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கூடுதலாக பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்: அ. சொத்து அடையாளப்பூர்வ சுவாதீனத்தில் உள்ளது மற்றும் ஏலதாரர் தனது சொந்த பொறுப்பில் அடையாளப்பூர்வ சுவாதீனச் சொத்தை வாங்குகிறார். ஆ. வங்கியானது சொத்தை அடையாளப்பூர்வ சுவாதீனத்தில் மட்டுமே ஒப்படைக்கும் மற்றும் வெற்றிகரமான ஏலம் எடுத்தவர்/ வாங்குபவர், வங்கியிடமிருந்து நேரடி சுவாதீனத்தில் கோர கூடாது. இ. வங்கியானது சொத்தினை நேரடி சுவாதீனத்தில் ஒப்படைப்பதற்கு பொறுப்போ அல்லது கடமையோ கிடையாது. ஈ. வெற்றிகரமான ஏலத்தில் எடுப்பவர், பணத்தைத் திரும்பப் பெறும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், எந்தவொரு வட்டியையும் கோருவதற்கு உரிமை பெறமாட்டார். உ. வெற்றிகரமான ஏலதாரர், மின்-ஏலத்திற்குப் பிறகு, மேற்கண்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்கூறிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை (அ முதல் ஈ வரை) உறுதிப்படுத்தும் உறுதிமொழி உடன்படிக்கையை உடனடியாக சமர்ப்பிக்க வேண்டும். ஊ. விற்பனைக்குப் பிறகு, வெற்றிகரமான ஏலதாரர் அறிவிப்பு மற்றும் ஒப்பந்தத்தை சமர்ப்பிக்கத் தவறினால், ஏல டேவணித் தொகை பறிமுதல் செய்யப்படும்.

ஏலச் சொத்தினை பார்வையிட நாள் மற்றும் நேரம் : 31.10.2026 பிற்பகல் 03.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை
மின் ஏலத் தேதி மற்றும் நேரம் : 07.11.2026 பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை https://www.bankofbaroda.in/e-auction.htm online auction portal https://baanknet.com பார்க்கவும். மேலும் விலைக்குறிப்பீட்டாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, தொலைபேசி எண்.044-26323114 கைபேசி:9840951343 அவர்களை தொடர்பு கொள்ளலாம்.

இடம் : செங்குன்றம்
தேதி : 03.10.2026
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாங்க் ஆஃப் பரோடா

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda
India's International Bank
119

பிராந்திய அலுவலக ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை (ROSARB)
சென்னை ரூரல் ரீஜியன், எண்.123, மெஸ்ஸனைன் தளம்,
துகார் டவர்ஸ், RL சாலை, எழும்பூர், சென்னை-600 008.
Phone: 044-28885428, E-mail: sarcmt@bankofbaroda.bank.in; Web: www.bankofbaroda.bank.in

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV - A யின்படி (விதி 6 (2) மற்றும் 8 (6) யை பார்க்கவும்)
2002-ம்ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் விதிகளின் கீழ் 8(6) & 6(2) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல்

கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் விவரம், நிலுவைத் தொகை, சொத்து விவரம், குறைந்த பட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ.எண்.1: கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களின் பெயர் & முகவரி: கடன்தாரர் திரு. தியாகராஜன் தங்கதுரை, த/பெ. திரு. M. தியாகராஜன், எண்.2167A, சோலையம்மன் நகர், 4வது தெரு, காந்தி நகர் மேற்கு, பொன்னேரி வட்டம், செங்குன்றம், திருவள்ளூர் மாவட்டம் -600052.

மொத்த நிலுவைத் தொகை: 30.09.2026 அன்றுள்ளபடி ரூ. 51,74,249.30/- மேலும் 30.09.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய வட்டி பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவீனங்கள். — சுவாதீனம் நிலை : மெய்நிலை

அசையா சொத்தின் விரிவான விவரங்கள்: தென் சென்னை பதிவு மாவட்டம், சைதாப்பேட்டை இணை-1 சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், கொளுத்துவாஞ்சேரி கிராமத்தின் சர்வே எண். 31/2A, பட்டா எண்.939 இன்படி சர்வே எண்.31/2A5 இல் அடங்கிய மருதம் நகர் விரிவாக்கம், மனை எண்.20 இல் அமைந்துள்ள பரப்பளவு மொத்தம் 2400சதுர அடியின் 960சதுர அடி விஸ்தீரணத்தில் பிரிக்கப்படாத பங்கு 320சதுர அடி நிலம், அதனுடன் பொதுப்பரப்பு மற்றும் கார் நிறுத்தும் இடம் உட்பட, அதில் கட்டப்பட்டுள்ள SAI ENCLAVE, என்ற பெயரில் உள்ள கட்டிடத்தின் தரை தளத்தில் 950சதுர அடி சூப்பர் கட்டிடப்பரப்பு கொண்ட ஃப்ளாட் எண். G 2 அதனுடன் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, மனை எண்.20 இன் எல்லைகள்: வடக்கில்- சாலை; தெற்கில்- திருமதி. வதா ரவிச்சந்திரன் அவர்களின் உரிமைப்பெற்ற நிலம் மனை எண்.17; கிழக்கில்- திரு. தாமோதரன் அவர்களின் உரிமைப்பெற்ற மனை எண்.19; மேற்கில்- : மனை எண்.21; நாற்புறப்புகள்: வடக்கில்- 40அடி; தெற்கில்- 40அடி; கிழக்கில்- 60அடி; மேற்கில்- : 60அடி; கூட்டுப்பரப்பளவு 2400சதுர அடி விஸ்தீரணம்.
Latitude : 13.028766 N, Longtitude: 80.139601 E

குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை	ஏல உயர்வு தொகை
₹ 42,27,000/-	₹ 4,22,700/-	₹ 25,000/-

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்: (வ.எண்.1) 15.10.2026, மதியம் 01 மணி முதல் மாலை 5 மணி வரை
மின் ஏல தேதி & நேரம் (வ.எண்.1) 22.10.2026 அன்று மதியம் 2 மணி முதல் மாலை 6 மணி வரை | வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்
EMD தொகை செலுத்த கடைசி தேதி : 22-10-2026 அன்று பிற்பகல் 1.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பாக

வ.எண்.2: கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களின் பெயர் மற்றும் முகவரி ; கடன்தாரர்கள்: திரு. அஹ்மத் இக்பால் சாகுல் ஹமீத், எண்.15/14, இராகவன் காலனி, ஆண்டவர் நகர், கோடம்பாக்கம், சென்னை -600 024 மேலும் ஒரு முகவரி: மனை எண்.93, ஃப்ளாட் எண்.S2, இரண்டாம் தளம், ஸ்ரீ இராம் ஆஞ்சநேயா கார்டன், சாலமங்கலம் கிராமம், தமிழ்நாடு - 601 301

மொத்த நிலுவைத் தொகை: 04.10.2026 அன்றுள்ளபடி ரூ. 75,17,320.14 மேலும் 04.10.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய வட்டி பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவீனங்கள். — சுவாதீனம் நிலை : மெய்நிலை

வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் அசையா சொத்தின் விரிவான விவரங்கள்:
அட்டவணை A (மொத்தச் சொத்து): செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் சார்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் எல்லைகளுக்குட்பட்ட எண்.142, சாலமங்கலம் கிராமத்தின் பழைய சர்வே எண்கள்.219/4 & 219/2A1, பட்டா எண்.2839 இன்படி புதிய சர்வே எண்.219/18 ஆகியவற்றில் அடங்கிய (C.T./D.T.C.P.M 83-140/ LP 103இன்படி அங்கீகாரம்பெற்ற மனைப்பிரிவு) "ஸ்ரீ இராம ஆஞ்சநேயா கார்டன்" என்ற பெயரில் உள்ள மனைப்பிரிவு மனை எண்.93 இன் பரப்பளவு 1800சதுர அடி விஸ்தீரணங்கொண்ட காலி வீட்டு மனை அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, நிலத்தின் எல்லைகள்: வடக்கில்: மனை எண்.94, தெற்கில்: மனை எண்.92, கிழக்கில்: 24அடி சாலை மற்றும் மேற்கில்: மனை எண்.86, நாற்புறப்புகள்: கிழக்கு மேற்காக வட புறம்:60அடி, கிழக்கு மேற்காக தென் புறம்:60அடி, வடக்குத் தெற்காக கிழக்கு புறம்: 30அடி, வடக்குத் தெற்காக மேற்கு புறம்:30அடி.
அட்டவணை B: அட்டவணை"A"சொத்தின் மொத்தமாக 1800ச.அடி விஸ்தீரணத்தில் பிரிக்கப்படாத பங்கு 370ச.அடி நிலம் அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் (பொதுப் பரப்பு உட்பட) இரண்டாம் தளத்தில் பரப்பளவு 1196ச.அடி கட்டப்பட்டுள்ள ஃப்ளாட் எண்.S2.
Latitude: 12.878922 N, Longitude 80.006819 E, குறிப்பு: மதிப்பீட்டு அறிக்கையின்படி சூப்பர் கட்டிடப் பரப்பளவு 864ச.அடி.

குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை	ஏல உயர்வு தொகை
₹ 19,28,000/-	₹ 1,92,800/-	₹ 25,000/-

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்: (வ.எண்.2) 16.10.2026, மதியம் 01 மணி முதல் மாலை 5 மணி வரை
மின் ஏல தேதி & நேரம் (வ.எண்.2) 23.10.2026 அன்று மதியம் 2 மணி முதல் மாலை 6 மணி வரை | வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்
EMD தொகை செலுத்த கடைசி தேதி : 23-10-2026 அன்று பிற்பகல் 1.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பாக

மேலும் விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணையதளமான https://bankofbaroda.bank.in/e-auction & ஆன்லைன் விற்பனைக்கான https://baanknet.com. இணையதள இணைப்பை பார்வையிடலாம். மேலும் விருப்பமுள்ள ஏலதாரர்கள் அதிகாரப்பூர்வ அதிகாரியை தொலைபேசி: 044-28885428 எண்ணிலும் கைபேசி எண். 8940056367 ஆகிய எண்களிலும் தொடர்பு கொள்ளவும்
விதிமுறைகள் & நிபந்தனைகளை அறிய இங்கு ஸ்கேன் செய்யவும்

தேதி : வ.எண்: 1 ; 03.10.2026 ; வ.எண்: 2 ; 05.10.2026 ;
இடம்: சென்னை
அதிகாரபூர்வ அதிகாரி,
பேங்க் ஆஃப் பரோடா

बैंक ऑफ़ बड़ौदा
பேங்க் ஆப் பரோடா
India's International Bank
119

பிராந்திய அலுவலக ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை (ROSARB)
சென்னை ரூரல் ரீஜியன், எண்.123, மெஸ்ஸனைன் தளம்,
துகார் டவர்ஸ், RL சாலை, எழும்பூர், சென்னை-600 008.
Phone: 044-28885428, E-mail: sarcmt@bankofbaroda.bank.in; Web: www.bankofbaroda.bank.in

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV - A யின்படி (விதி 6 (2) மற்றும் 8 (6) யை பார்க்கவும்)
2002-ம்ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் விதிகளின் கீழ் 8(6) & 6(2) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல்

கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் விவரம், நிலுவைத் தொகை, சொத்து விவரம், குறைந்த பட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களின் பெயர் & முகவரி: கடன்தாரர் திருமதி தேவகி பூபதி, பழைய எண்.273, புதிய எண் 167, தம்மராஜா கோயில் தெரு, கீழ்ப்பாக்கம் கார்டன் சாலை, சென்னை, தமிழ்நாடு 600010, மேலும், திருமதி தேவகி பூபதி, உரிமையாளர் M/s Kay kay Mobile accessories and stationery, எண்:273, கீழ்ப்பாக்கம் கார்டன், சென்னை, தமிழ்நாடு 600010, திருமதி. தேவகி பூபதி, பிளாட் எண்.F2 முதல் தளம், பிளாக் B "கருடா அபார்ட்மெண்ட்ஸ்", சிற்பி நகர் பேஸ் II, கூடுவாஞ்சேரி 603202.

மொத்த நிலுவைத் தொகை: 30.09.2026 அன்றுள்ளபடி ரூ. 40,66,703/- மேலும் 30.09.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய வட்டி பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவீனங்கள். — சுவாதீனம் நிலை : மெய்நிலை

அசையா சொத்தின் விரிவான விவரங்கள்: தென்சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, நந்திவரம்-கூடுவாஞ்சேரி நகர ஊராட்சி எல்லைகளுக்குட்பட்ட கூடுவாஞ்சேரி கிராமம்-603202, இல் அடங்கிய பழைய சர்வே எண்.39/4 மற்றும் 39/4A, பட்டா எண்.2556 இன் படி புதிய சர்வே எண்.39/4A2, மேலும் நிர்வாக அதிகாரி (Executive Officer) அவர்களால் அனுமதிக்கப்பட்ட 22.07.2013 தேதியிட்ட எண்.119/2013-2014, 314/2013, 27.09.2013 தேதியிட்ட மனைபிரிவு துணைப்பிரிவு அனுமதி எண்.187/2013-2014, 536/2013. இன் படி சிற்பி நகர் பேஸ்-II, கருடா அப்பார்ட்மெண்ட், அதன் நிலத்தின் மொத்த விஸ்தீரணம் 3488 சதுர அடி (8 செண்ட்கள்) காலி வீட்டு மனை மற்றும் அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி எல்லைகள், வடக்கில் சர்வே எண்.40 இன் உள்ள நிலம், தெற்கில் சிற்பி நகர் பேஸ் II இல் உள்ள மனை எண்.16, கிழக்கில் 23 அடி சாலை, மேற்கில் சர்வே எண்.39/4A, (திரு.டேனியல் அவரின் மீதமுள்ள சொத்துபகுதி) நாற்புறப்புகள் வடபுறம் 40 அடி, தென்புறம் 43 அடி, கிழக்குபுறம் 84 அடி, மேற்குபுறம் 81 அடி. அட்டவணை B சொத்து, (பத்திரத்தின்படி தெரிவிக்கப்பட்ட சொத்து). அட்டவணை A சொத்தின் குறிப்பிட்டுள்ள 3488 சதுர அடி நிலத்தில் பிரிக்கப்படாத பங்கு 344 சதுர அடி, அதனுடன் கருடா அப்பார்ட்மெண்ட்ஸ் என பெயரிடப்பட்ட அப்பார்ட்மெண்ட் - இன் பிளாக் B, முதல் தளத்தின் 898 சதுர அடி (பொதுப்பரப்பு உட்பட) பிளாட் எண்.F2. Latitude : 12.852119 N Longitude : 80.057223 E

குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை	ஏல உயர்வு தொகை
₹ 27,70,000/-	₹ 2,77,000/-	₹ 25,000/-

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்: 15.10.2026, மதியம் 01 மணி முதல் மாலை 5 மணி வரை
EMD தொகை செலுத்த கடைசி தேதி : 22-10-2026 அன்று பிற்பகல் 1.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பாக
மின் ஏல தேதி & நேரம் 22.10.2026 அன்று மதியம் 2 மணி முதல் மாலை 6 மணி வரை | வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்
விதிமுறைகள் & நிபந்தனைகளை அறிய இங்கு ஸ்கேன் செய்யவும்

மேலும் விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணையதளமான https://bankofbaroda.bank.in/e-auction & ஆன்லைன் விற்பனைக்கான https://baanknet.com. இணையதள இணைப்பை பார்வையிடலாம். மேலும் விருப்பமுள்ள ஏலதாரர்கள் அதிகாரப்பூர்வ அதிகாரியை தொலைபேசி: 044-28885428 எண்ணிலும் கைபேசி எண். 8940056367 ஆகிய எண்களிலும் தொடர்பு கொள்ளவும்

தேதி : 03.10.2026;
இடம்: சென்னை
அதிகாரபூர்வ அதிகாரி,
பேங்க் ஆஃப் பரோடா